**கவனிக்க.-** *2014.11.14 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III), பகுதி II, பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியவை பிரசுரிக்கப்படவில்லை.*

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1890 - 2014 නොවැම්බර් මස 21 වැනි සිකුරාදා - 2014.11.21

*1890 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# *பகுதி* III - *காணிகள்*

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 240 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 241 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது *2014, திசெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, நவெம்பர் மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

### காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள கணேவத்த பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் தியுனுகல்கே பிரசாத் சமிந்த உதயகுமார ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட் பிரிவின் கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1997.04.23 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள குரு/பர 111650 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான தித்தவெல்ல கும்புக்கொட எனும் முகவரியில் வசிக்கும் கேரகலகே அல்லிஸ் அப்பு என்பவருக்கு கையளிக்கப்பட்டு குருநாகல் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் B 12607/97 ஆம் இலக்கத்தின் கீழ் 1997.10.16ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லையென அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2014.12.10 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

#### அட்டவணை

குருநாகல் நிருவாக மாவட்டத்தின் கணெவத்த பிரதேச செயலாளர் பிரிவின் தித்தவெலிகந்தகே கோரளையிலுள்ள 433, தித்தவெல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த தித்தவெல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், ............... என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு ..........ஆம் இலக்க வெளிக்களத் தாளில்/என்பவரால் தயாரிக்கப்பட்டு ..........ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் என்பவரால் தயாரிக்கப்பட்ட இரேகை வரைதலில் ..........ஆம் இலக்க காணித்துண்டென காட்டப்பட்டுள்ளதும் 02 றூட் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு.

வடக்கு:- மலைக்குச் செல்லும் பாதை;
கிழக்கு:- கே. அல்விஸ் அப்பு என்பவரின் காணி;
தெற்கு:- எம்.பி.ஜினதாச என்பவரின் காணி;
மேற்கு:- பாதை.

டி.பி.சி.உதயகுமார,
பிரதேச செயலாளர்,
கணேவத்த.

பிரதேச செயலகம்,
கணேவத்த,
2014, ஒற்றோபர் 03.

11-442/1

### காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள பண்டவஸ்நுவர கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் எஸ்.எம்.பெத்தாவடு ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட் பிரிவின் கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1986.05.14 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள குரு/பர 14073 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான கொன்னவ, அனுக்கனே எனும் முகவரியில் வசிக்கும் வன்னி ஆரச்சிகே நிகுலஸ் அப்புஹாமி என்பவருக்கு கையளிக்கப்பட்டு குருநாகல் மாவட்டப்பதிவாளர் அலுவலகத்தில் 3210 மற்றும் ஒ/66/86 ஆம் இலக்கத்தின் கீழ் 1936.10.06 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால், பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்பட வில்லையென அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2014.12.10 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

#### அட்டவணை

குருநாகல் நிருவாக மாவட்டத்தின் ஹெட்டிபொல பிரதேச செயலாளர் பிரிவின் அங்கமுவ பற்றில்/ கோரளையிலுள்ள 377- வெட்டஹபிட்டிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கொன்னவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், குருநாகல் நிலஅளவையாளர் அத்தியட்சகரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு 11 ஆம் இலக்க வெளிக்களத்தாளில் / 2417 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் இரேகை வரைதலில் 319 ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டுள்ள 0.320 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித் துண்டு அபகஹலன்தமுகலான.

வடக்கு:- பிரவேசிக்கும் வழி;
கிழக்கு:- காணித்துண்டு இலக்கம் 320;
தெற்கு:- காணித்துண்டுகள் 335,336;
மேற்கு:- காணித்துண்டு இலக்கம் 318.

எஸ். எம்.பெத்தாவடு,
பிரதேச செயலாளர்,
பண்டுவஸ்நுவர.

பிரதேச செயலகம்,
பண்டுவஸ்நுவர கிழக்கு,
2014, யூலை 09.

11-442/2

### காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள வணாத்தவில்லு பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் ரவீந்திர விக்ரமசிங்க ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட் பிரிவின் கீழ், அதி உத்தமராம் இலங்கைக் குடியரசின் ஆணையாளர் வில்லியம் கொபல்லாவ அவர்களினால் 1974.01.24 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள ஆர்.10590 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான தும்மலதெனிய கிழக்கு, வென்னப்புவ எனும் முகவரியில் வசிக்கும் ஹெட்டி பத்திரன்னலாகே பிரேமதாச குணவர்தன என்பவருக்கு கையளிக்கப்பட்டு புத்தளம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் ஆர்.10590 ஆம் இலக்கத்தின் கீழ் 1974.02.12 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால், பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்பட வில்லையென அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2014.12.01 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

#### அட்டவணை

புத்தளம் நிருவாக மாவட்டத்தின் வனாத்துவில்லு பிரதேச செயலாளர் பிரிவின் பொம்பரிப்புவ பற்றில் கோரளையிலுள்ள கல்பிட்டி இறைவரி பிரதேச வனாத்தவில்லு எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நிலஅளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு 11/13,14,21,22 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் / என்பவரால் தயாரிக்கப்பட்ட இரேகை வரைதலில் 208 ஆம் இலக்க காணித்துண்டென காட்டப்பட்டுள்ளதும் 10 ஏக்கர் 01 றூட் 34 பேர்ச் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு: காணித்துண்டின் பெயர் கெமுத்தோடைக் காடு.

வடக்கு:- காணித்துண்டு இலக்கம் 155;
கிழக்கு:- காணித்துண்டு இலக்கம் 209;
தெற்கு:- கெமுத்தோடைக் காடு;
மேற்கு:- காணித்துண்டு இலக்கம் 207.

ரவீந்திர விக்ரமசிங்க,
பிரதேச செயலாளர்,
வனாத்தவில்லு.

பிரதேச செயலகம்,
வனாத்தவில்லு.

11-442/3

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/38905.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : NP/28/04/2/01/331.

### முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

வவுனியா மாவட்டம், வவுனியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வைரவபுளியங்குளம் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வைரவபுளியங்குளம் எனும் கிராமத்தில் FVP - 66 ஒழுங்குபடுத்தப்பட்ட வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 1994, 1995 எனும் பிரமாணத்தில் 01 ஏக்கர் 00றூட் 10.06 பேர்ச்சுகள் கொண்ட அரச காணியை குத்தகைக்குத் தருமாறு கேட்டு வவுனியா தெற்கு பலநோக்கு சேவை கூட்டுறவுச் சங்கம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு: காணித்துண்டு இலக்கம் 1994:-

வடக்கு: பாதை (காணித்துண்டு இலக்கம் 335);
கிழக்கு: பாதை (காணித்துண்டு இலக்கம் 336);
தெற்கு: பாதை (காணித்துண்டு இலக்கம் 332);
மேற்கு: பாதை (காணித்துண்டு இலக்கம் 333).

காணித்துண்டு இலக்கம் 1995:-

வடக்கு: பாதை (காணித்துண்டு இலக்கம் 332);
கிழக்கு: பாதை (காணித்துண்டு இலக்கம் 336);
தெற்கு: பாதை (காணித்துண்டு இலக்கம் 329);
மேற்கு: பாதை (காணித்துண்டு இலக்கம் 330).

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**-முப்பது (30) வருடங்கள் (2014.08.04 ஆந் திகதி தொடக்கம் தொடக்கம் 2044.08.03ஆந் திகதி வரை);

**வருடாந்தக் குத்தகை.**- பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2014 ஆம் ஆண்டிற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 2% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்;

தவணைப்பணம்.- வருடாந்தக் குத்தகையின் மும்மடங்கு தொகையை தவணைப்பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி சங்க நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேசச் செயலாளர், ஸ்கோபின் கமிடி, இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) 2014.08.04 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 5 வருடங்கள் முடியும் வரையும் இந்தக் காணியை குத்தகைக்குப் பெற்றுக் கொண்டுள்ள காரணத்தைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் கீழ் குத்தகைக்கு விடுதல் அல்லது கைமாற்றம் செய்வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகச் செலுத்தப்படல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்படாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் விண்ணப்பத்திற்கு அமைய இக்குத்தகை வழங்கப்படும்.

நுவனி சுதுசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,(காணி)
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
''மிஹிகத்த மெதுர'',
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2014, நவெம்பர் 07.

11- 666

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/38157.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : NP/28/04/2/01/337

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

வவுனியா மாவட்டம், வவுனியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கோயில்குளம் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கோயில்குளம் எனும் கிராமத்தில் FSP -4739 எனும் வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 159, 160 பிரமாணத்தில் 02 ஹெக்டேயர் 03 றூட் 20 பேர்ச்சர்ஸ் காணியை ஸ்ரீ தேவி பூதேவி ஸ்ரீ மஹா விஸ்ணு தேவஸ்தான பரிபாலன சபை குத்தகைக்குத் தருமாறு கேட்டு விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 155;
கிழக்கு: காணித்துண்டு இலக்கம் 158;
தெற்கு: காணித்துண்டு இலக்கங்கள் 162 மற்றும் 163;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 123.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**-முப்பது (30) வருடங்கள் (2014.07.07 ஆந் திகதி தொடக்கம் தொடக்கம் 2044.07.06 ஆந் திகதி வரை);

**வருடாந்தக் குத்தகை.**- பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2014 ஆம் ஆண்டிற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 1/2% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்;

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி சமய நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) 2014.07.07 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 5 வருடங்கள் முடியும் வரையும் இந்தக் காணியை குத்தகைக்குப் பெற்றுக் கொண்டுள்ள காரணத்தைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் கீழ் குத்தகைக்கு விடுதல் அல்லது கைமாற்றம் செய்வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகச் செலுத்தப்படல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்படாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் விண்ணப்பத்திற்கு அமைய இக்குத்தகை வழங்கப்படும்.

நுவனி சுதுசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,(காணி)
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
''மிஹிகத்த மெதுர'',
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2014, நவெம்பர் 07.

11- 667

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/38991.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : மாகாண/இகோ/இ2/இப தீ. ப 4(5)

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்டம், கோப்பாய் பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட புத்தூர் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த புத்தூர் எனும் கிராமத்தில் PPYA2657 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம்01 எனக் காட்டப்பட்டுள்ளதும் 0.06 ஹெக்டேயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபை விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு: புத்தூர் மீசாலை வீதி;
கிழக்கு: பிரதேச சபை வீதி;
தெற்கு: அரச காணி;
மேற்கு: தனியார் காணி.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்**.-முப்பது (30) வருடங்கள் (2014.08.06 ஆந் திகதி தொடக்கம் தொடக்கம் 2044.08.05 ஆந் திகதி வரை);

**வருடாந்தக் குத்தகை**.- பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2014 ஆம் ஆண்டிற்கான காணியின் வர்தகப் பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக் குத்தகைப்பணமானது 5 வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்படாத குத்தகைப் பணம் முடிந்த 5 வருடங்களின் இறுதியில் கொடுக்கப்பட்ட தொகையிலும் பார்க்க 50% குறையாமல் இருத்தல் வேண்டும்;

தவணைப் பணம்.- வருடாந்தக் குத்தகையின் மும்மடங்கு தொகை தவணைப்பணமாக செலுத்தப்படல் வேண்டும்;

தண்டப் பணம்.- வருடாந்தக் குத்தகையின் மும்மடங்கு தொகையை தவணைப்பணமாக செலுத்த வேண்டும்;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக் குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) 2014.08.06 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 5 வருடங்கள் முடியும் வரையும் இந்தக் காணியை குத்தகைக்குப் பெற்றுக் கொண்டுள்ள காரணத்தைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் கீழ் குத்தகைக்கு விடுதல் அல்லது கைமாற்றம் செய்வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகச் செலுத்தப்படல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்படாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் விண்ணபத்திற்கு அமைய இக்குத்தகை வழங்கப்படும்.

நுவனி சுதுசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,(காணி)
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
''மிஹிகத்த மெதுர'',
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2014, நவெம்பர் 07.

11- 668

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/25733.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : சீபீசீ/எல்சீ/எல்டீ/4/1/ 4/195

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

கண்டி மாவட்டம், குண்டசாலை பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட மஹவத்த வடக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த குண்டசாலை எனும் கிராமத்தில் 3678 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம்47 எனக் காட்டப்பட்டுள்ளதும் 0.050 ஹெக்டேயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வதிவிட நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு திரு. மஹிந்த பண்டார ஏக்கநாயக்க என்பவர் விண்ணபித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு: காணித்துண்டு இலக்கம் 46 மற்றும் 40;
கிழக்கு: காணித்துண்டு இலக்கம் 40 மற்றும் 52;
தெற்கு: காணித்துண்டு இலக்கம் 52 மற்றும் 46;
மேற்கு: காணித்துண்டு இலக்கம் 46.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க்

காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**-முப்பது (30) வருடங்கள் (1995.06.15 ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி);

**வருடாந்தக் குத்தகை.**- பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப்பீட்டிற்கமைய 1995 ஆம் வருடத்திற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்;

தண்டப் பணம்.- காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% மும்மடங்கு தொகை தண்டப்பணமாக செலுத்தப்படல் வேண்டும்;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக் குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) 2014.09.26 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 5 வருடங்கள் முடியும் வரையும் இந்தக் காணியை குத்தகைக்குப் பெற்றுக் கொண்டுள்ள காரணத்தைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் கீழ் குத்தகைக்கு விடுதல் அல்லது கைமாற்றம் செய்வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகச் செலுத்தப்படல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்படாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

(ஐ) வீட்டினைக் கட்டுவதற்காக காணி பராதீனப்படுத்தப்படும் போது குறிக்கப்படுகின்ற காலவரைக்குள் வீட்டுவேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டி இருப்பதுடன் அவ்வாறு பூரணப்படுத்தப்படாத போது நீண்டகாலக் குத்தகை இரத்து செய்யப்பட்டதாகக் கணிக்கப்படுவதுடன் அரசின் பேரிற்கு மீண்டும் காணி உரிமை மாற்றம் செய்யப்படும்;

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் விண்ணப்பத்திற்கு அமைய இக்குத்தகை வழங்கப்படும்.

டி.டி.எம்.ஜயதிலக்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2014, நவெம்பர் 04.

11- 669

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.